

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

# குள்ள நரி போல புத்திசாலியாக இருங்கள்

## ப்ராம்ப்ட்டன் நகரில் ஏன் குள்ளநரிகள் நிறைய கண்ணில் படுகின்றன? நகர நிர்வாகம் அவற்றை ஏன் அப்புறப்படுத்தி இடம் மாற்றுவதில்லை?

- நகர சாலை அல்லது நடைபாதையில் பெரும்பாலும் குள்ளநரிகளைப் பார்ப்பதில்லை என்று பலர் நம்பினாலும், அவை உண்மையில் மிகவும் பொதுவாகவே இருந்து வருகின்றன. அவை மிகவும் தகவமைக்கத்துக் கொள்ளக்கூடிய விலங்குகள் ஆகும், மற்றும் கிராமப்புறங்களில் நல்ல முறையில் வளர்கின்றன, ஆனால் ப்ராம்ப்ட்டன் போன்ற பெரிய நகரங்களில் உள்ள பள்ளத்தாக்குகள், பள்ளத்தாக்கு நிலங்கள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகளிலும் நன்றாக வாழ்கின்றன.
- குள்ளநரிகளை இடமாற்றம் செய்வது அல்லது கொல்வது என்பது ஒரு விரும்பத்தக்க விஷயமே கிடையாது; இந்த விலங்கினைப் பிடிப்பது மிகவும் கடினமானது மற்றும் இது ஒரு தற்காலிக அணுகுமுறை மட்டுமே. ஒரு குள்ளநரி அகற்றப்பட்டால், அது மற்ற வசிப்பிட பகுதிகளுக்குச் சென்றுவிடும்.
- ஒன்ட்டாரியோவின் மீன் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், குள்ளநரிகளைப் பிடித்து ஒரு கிலோமீட்டருக்கு அப்பால் இடமாற்றம் செய்வது அனுமதிக்கப்படுவதில்லை.

## இந்த ஆண்டின் போக்கில் ப்ராம்ப்ட்டன் நகரில் அவை அதிகம் தென்படுவது ஏன்?

- பருவகாலத்தைப் பொறுத்து, அவை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தென்படும். ஒவ்வொரு குளிர்காலத்திலும், சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப குள்ளநரிகள் அதிகமாகத் தென்படும்; ஏனெனில் சுற்றுச்சூழலுடன் அவை ஒத்துப்போவது என்பது ஒரு பெரிய விஷயமில்லை என்பதால்.
- ஜனவரி பிற்பகுதியிலிருந்து பிப்ரவரி நடுப்பகுதி வரை அவற்றுக்கு இனச்சேர்க்கை காலம் ஆகும், மற்றும் அதனை அடுத்த வசந்த காலத்தில் குட்டி போடும் பருவமாகும். இந்தச் சமயத்தில், குள்ளநரிகள் காலியான இடங்களைத் தேடியோ அல்லது அவற்றின் சாத்தியமான ஜோடியைத் தேடியோ குகைகளைத் தேடியோ பரவலாக சிதறடிக்கப்படலாம்.
- மனிதர்கள் வாழும் வீடுகளின் அருகில் வருவதற்கு அவை வசதியாக இருப்பதாக உணர்வதால் அவை தென்படுவது அதிகமாகி விட்டது (அதாவது அவற்றுக்காக மனமுவந்து கையால் உணவு கொடுப்பது, முற்றங்களை சுத்தம் செய்யாமல் வைத்திருப்பது, வீட்டு செல்லப்பிராணிகளை கட்டிவைக்காமல் உலாவித்திரிய விடுவது போன்றவற்றால்)

## எனது வீட்டருகில் குள்ளநரிகள் வருவதை நான் எப்படித் தடுப்பது?

- **வனவிலங்குகளுக்கு உணவளித்து பழக்காதீர்கள்.** உங்கள் வீட்டருகில் சிந்தியுள்ள உணவுத்துகள்கள் பெருச்சாளி மற்றும் பிற சிறிய விலங்குகளை ஈர்க்கின்றன; அந்தச் சிறிய விலங்குகள்தான் குள்ளநரிகளுக்கான உணவாகும் ஆதாரங்களாகின்றன.
- **குப்பைகளை எடுத்துச் செல்லவிருக்கும் நாளில் மட்டும் அவற்றை உங்கள் வீட்டிற்கு வெளியே வையுங்கள்.** வனவிலங்குகள் கண்ணில் படாமல் உங்கள் குப்பைத் தொட்டிகளுக்கு மூடியிட்டு, பாதுகாக்கப்பட்ட இடத்தில் வைக்கவும்.
- **உங்கள் மரங்களில் மற்றும் தோட்டங்களில் இருந்து, தரையில் விழுந்த பழுத்த பழங்கள் அல்லது காய்கறிகளை எடுத்து அகற்றுங்கள்.** தரையில் விழும் அழுகிய பழங்களை அழித்து விடுங்கள், மற்றும் பருவகாலத்தின் முடிவில் உங்கள் தோட்டங்களை துப்புரவு செய்யுங்கள்.
- **உங்கள் செல்லப்பிராணியை உங்கள்  கவனிப்பில் இல்லாமல் வெளியில் விடாதீர்கள்.** உங்கள் வீட்டு முற்றத்தில் உங்கள் செல்லப்பிராணியைப் கண்காணிப்பதே அவற்றுக்கு சிறந்த பாதுகாப்பாகும்..
- **வேலிகள், மற்றும் தளங்கள் அடியில், மற்றும் கொட்டகைகளில் உள்ள இடைவெளிகளை மூடவும்.**

City of Brampton
**Animal Services**

311 **brampton.ca**/animalservices

BRAMPTON

## குள்ளநரி ஒன்று என்னை நோக்கி வந்தால் நான் என்ன செய்வது?

- **நின்றுவிடுங்கள்.** குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகள் இருந்தால் கையில் எடுத்துக்கொள்ளுங்கள்.



- **அசையாமல் நில்லுங்கள்.** ஒரு ஒருபோதும் குள்ளநரியை பார்த்து ஓடவேண்டாம்.



- **உங்களை நீங்களே பலசாலியாக்குங்கள்.** கோபமுற்றதாக, நிமிர்ந்து நின்றபடி உங்கள் கைகளை உயர்த்தி காற்றில் அப்படியும் இப்படியும் அசையுங்கள்.



- **உரத்த குரல் எழுப்பி மனோதிடத்துடன் இருங்கள்.** உரக்க கத்துங்கள் உங்கள் கால் பாதங்களைத் தரையில் அடியுங்கள், கைகளைத் தட்டுங்கள். விசில் அடித்து ஒலி எழுப்புங்கள், பிளாஸ்ட்டிக் பை அல்லது குடையால் வெடிப்பு சத்தம் எழுப்புங்கள்.



- **எதிர்த்துப் போராடுங்கள்.** குச்சிகள் அல்லது கற்களை குள்ளநரியை நோக்கி எறிந்து அதனை பயமுறுத்தி நிறுத்துங்கள். குள்ளநரி மீது விழாமல் வீசுங்கள்.



- **மெதுவாக பின்வாங்குங்கள்.** கண்ணுக்கு கண் வைத்தபடி பின் நோக்கி வாருங்கள் மற்றும் ஒருபோதும் ஓட வேண்டாம்.



உங்கள் குழந்தைகளுடன் இந்த செய்தியைப் பகிர்ந்து கொள்ளுமாறு நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம், அதனால் அவர்களும் குள்ளநரிகளிடம் இருந்து எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பதை அறிவார்கள். பொது பாதுகாப்புக்கு குள்ளநரி ஏதேனும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக தெரிந்தால், உடனடியாக, **911 ஐ அழைக்கவும்**.

City of Brampton
**Animal Services**

குள்ளநரிகள் வாழும் இடத்தில் வசிப்பது பற்றிய மேலும் தகவல்களுக்கு அணுகவும்:

இயற்கை வளம் மற்றும் காடுகள் அமைச்சகம்
**www.ontario.ca/mnrf**
**1-800-667-1940**

கனடா நாட்டு குள்ளநரி கண்காணிப்பு
**www.coyotewatchcanada.com**
**905-931-2610**

ப்ராம்ப்ட்டன் நகர விலங்குகளுக்கான சேவை அமைப்பு 475, கிறிஸ்லர் ட்ரைவ்
**www.brampton.ca/animalservices**
**905-458-5800**

3-1-1 **brampton.ca**/animalservices

BRAMPTON